# நாட்டு விடுதலையும் நமது சமுதாய விடுதலையும்



தலைவர் கலைஞர்

# நாட்டு விடுதலையும் நமது சமுதாய விடுதலையும்

## முதல்வர் கலைஞர்

அவர்கள்

44-வது விடுதலைநாள் விழா

மற்றும் மண்டல் கமிஷன் வெற்றி விழாப்

பொதுக்கூட்டத்தில்

ஆற்றிய உரை

பல்லடம் மாணிக்கம்
தமிழ் நூல் காப்பகம்
திருமுதுகுன்றம்.

தலைமைக் கழக வெளியீடு,

திராவிட முன்னேற்றக் கழகம்

'' அண்ணா அறிவாலயம் '' சென்னை-600 018.

1990 ஆகஸ்ட்

தமிழ் நூல் காப்பகம்
52263
நகர், விருத்தாசலம் - 606 001.

விலை : ரூ. **2**/-

அச்சிட்டோர் :

நியு ரெட்சன் பிரிண்டர்ஸ்
19/1, முசபர் ஜங் பக்தூர் தெரு,
சென்னை-600 005. தொலைபேசி : 84 62 66

# இந்நூல் . . . . ,

மண்டல் குழுவின் பரிந்துரைகளைப் பற்றிய வரலாற்றின் காலகட்டங்களை இந்நூல் வெளிப் படுத்துகிறது. சமத்துவ சமுதாயத்தை நிலைபெறச் செய்யவும் சமூகநீதியை உறுதிபடுத்தவும் நீதிக்கட்சி, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் பல்லாண்டு காலமாகப் போராடி வந்திருக்கின்றன.

தலைவர் கலைஞர் அவர்கள் மண்டல் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயத்தை அனைவரும் ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில் தெளிவாகக் கூறியுள்ளார்.

மண்டல் குழுவின் பரிந்துரைகளைப் பற்றியும், அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றிய, தலைவர் கலைஞரின் கொள்கை வழியான கருத்துக்களை இச்சிறு வெளியீட்டின் மூலம் நாட்டு மக்களுக்கு அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

**என். செல்வேந்திரன்**
வெளியீட்டுச் செயலாளர்,
தி.மு.க.

நூல் காப்பகம்
நகர், விருத்தாசலம் - 606 001.

# நாட்டு விடுதலையும் நமது சமுதாய விடுதலையும்

**44-வது விடுதலை நாள் விழா மற்றும் மண்டல் கமிஷன் வெற்றி விழாப் பொதுக்கூட்டத்தில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-**

இந்த மண் மீட்கப்பட்ட விடுதலைநாள் விழாவை ஆண்டுதோறும் மகிழ்ச்சியோடு கொண்டாடுகின்ற நாம் இன்றைய தினம் சமூக விடுதலை வாய்த்தது என்பதையும் இரட்டிப்பு மகிழ்ச்சியோடு கொண்டாடுகின்ற வகையில் சிங்காரவேலர் திடலில் வெள்ளம்போல் குழுமியிருக்கின்றோம்.

பேராசிரியர் அவர்களும், கழகத்தின் முன்னோடிகளும், விடுதலைநாள் விழாவில் நாம் பெரிதும் பூரிப்பு அடைகிற வண்ணம் மண்டல்குழு பரிந்துரைகளை மத்தியஅரசு ஏற்றுக் கொண்டுள்ள வெற்றிச் செய்தி குறித்து விளக்கவுரை ஆற்றிச் சென்றிருக்கிறார்கள்.

## கழகத்தின் நடவடிக்கைகளை அகில இந்தியாவும் கூர்ந்து நோக்குகிறது !

தி.மு.கழகம் தனக்கென சில முக்கியமான லட்சியங்களை, கொள்கைக் கோட்பாடுகளைக் கொண்ட ஓர் பேரியக்கம். மாநில

அளவிலே அதன் பணி பரவலாக நடைபெற்றாலும்கூட இந்த மாநிலத்திலே தி.மு.கழகம் இயக்க ரீதியாக ஆற்றுகின்ற பணியானாலும் அல்லது கழகம் அரசுப் பொறுப்பேற்று, அந்த அரசின் வாயிலாக மேற்கொள்கிற பணியானாலும் அவை மாநில அளவிலே நின்றுவிடாமல் மற்ற மாநிலங்களிலும் சிறப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் இந்தியத்துணைக் கண்டம் முழுமையும் அதன் பாதிப்பு தொடர்ந்து இருந்து வருகிறது என்பதையும், அதன் காரணமாக தி.மு கழகம் ஒரு மாநிலக் கட்சி என்றாலும்கூட அதனுடைய நடவடிக்கைகளை-திட்டங்களை-அதன் கொள்கைகளை - குறிக்கோள்களை அகிலஇந்திய அளவிலே உள்ள தலைவர்கள், கட்சிகள் கூர்ந்து நோக்கிக்கொண்டிருக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

அந்த அடிப்படையிலே பார்த்தால் நாம் கழக ஆட்சியில் இந்த மாநில அளவிலே மேற்கொண்ட சில முடிவுகளை அகில இந்திய அளவிலே நம்முடைய வழிகாட்டுதலாக ஏற்றுக்கொண்டு நிறைவேற்றியிருக்கின்ற செய்திகளைச் சொல்ல முடியும்.

கழக ஆட்சியில் அறிஞர்அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றபோது மே நாள் விடுமுறை, நபிகள் நாயகம் பிறந்தநாள்விழா விடுமுறை இவைகளை ஆணை பிறப்பித்து அறிவிக்கவில்லை. அவைகள் விடுமுறை நாட்களாக அறிவிக்கப்படும் என்று அண்ணா அவர்கள் கூறினார்கள். அந்த விடுமுறை நாட்கள் ஊதியத்தோடு கூடிய விடுமுறை நாட்களாக அப்போது அறிவிக்கப்படவில்லை. அண்ணா அவர்களுடைய மறைவிற்குப்பிறகு பொறுப்பேற்றுக்கொண்ட நான் மேநாள் சம்பளத்தோடுகூடிய விடுமுறை நாளாக தமிழகத்திலே இனி கடைபிடிக்கப்படும் என்று அறிவித்தேன்.

அதைப்போலவே நபிகள் நாயகத்தின் பிறந்தநாள் விழாவும் சம்பளத்தோடுகூடிய விடுமுறை நாளாக-அரசு விடுமுறையாகக் கடைபிடிக்கப்படும் என்று அறிவித்தேன்.

தி.மு.கழக சார்புடைய தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை பல்வேறு மாநாடுகளை நடத்திய நேரத்தில் தமிழகத்திலே மே தினத்திற்கு விடுமுறை விடப்படுவதுபோல் இந்தியா முழுமையும் மேநாள் விடுமுறையாக வழங்கப்பட வேண்டும் என்று தீர்மானங்களைத் தொடர்ந்து நிறைவேற்றியதுண்டு. ஆனால் அந்தத் தீர்மானங்கள்-அந்த வேண்டுகோள் அன்னை இந்திரா

காந்தி பிரதமராக இருந்தபோது ஏற்கப்படவில்லை. பிறகு ராஜீவ் காந்தி பிரதமராக பொறுப்பேற்றுக்கொண்டு ஆண்டபோதும் லட்சியம் செய்யப்படவில்லை.

## அகில இந்திய அளவில் நடைமுறைக்கு வரும் தமிழகத்து முடிவுகள்!

தேசிய முன்னணி அரசு அமைந்து நம்முடைய அன்புக்கும் பாசத்திற்கும் உரிய வி.பி.சிங் அவர்கள் பிரதமராக பொறுப் பேற்றுக்கொண்ட நிலையில் இந்த ஆண்டு மேதினம் வருகிற நேரத்தில் சட்டமன்றத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நண்பர் வரதராஜன் விடுத்த வேண்டுகோளை ஏற்று. மேதினத்தில் இங்கே மேதினச் சின்னம் ஒன்று நிறுவவேண்டும் என்று கேட்டுக் கொண்டதை அலட்சியப்படுத்தாமல் மேதினச் சின்னம் ஒன்றை பல லட்சம் செலவில் நிறுவி அது நிறுவப்பட்ட நேப்பியர் பூங்காவின் பெயரையும் 'மே தினப் பூங்கா' என்று அறிவித்ததோடு, அதற்கு சில நாட்களுக்கு முன்பு மாநிலங்கள வையிலே பேசச் சென்ற தம்பி கோபால்சாமியிடத்தில், "நீங்கள் பேசும்போது தமிழ்நாட்டில் மேதின விடுமுறை இருப்பதுபோல் இந்தியா முழுமையும் மேதின விடுமுறை தேவை என்பதை வலியுறுத்துங்கள்" என்று கூறி தம்பி கோபால்சாமி மாநிலங்கள வையிலே அதை வலியுறுத்திப் பேசியபோது உடனடியாக மத்திய அரசு-பிரதமர் வி.பி சிங் அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டு தமிழகத்திலே மே தினத்திற்கு விடப்பட்ட சம்பளத்தோடுகூடிய அந்த விடுமுறை இனி இந்தியா முழுமைக்கும் உண்டு என்று தேசிய முன்னணி. அரசால் பிரதமர் வி.பி.சிங் அவர்களால் அறிவிக்கப் பட்டுள்ளது.

அதைப்போலவே, தமிழகத்தில் மாத்திரம்தான் நபிகள் நாயகம் பிறந்தநாள் விழா கழக ஆட்சிக் காலத்தில் விடுமுறையாக அறிவிக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. இன்றைக்கு தொலைக் காட்சியிலே நான் செய்தி கேட்டேன். இன்று காலையிலே தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றிய பிரதமர் வி.பி.சிங் அவர்கள் இனி இந்தியா முழுமையும் நபிகள் நாயகம் பிறந்தநாள் விழா அரசு விடுமுறையாக அறிவிக்கப்படும் என்று கூறியிருக்கிறார்.

எனவே, தமிழகத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் அகில இந்திய முடிவுகளாக இன்றைக்கு மேற்கொள்ளப்படுகின்றன என்றால்

தமிழகத்திலும், டெல்லியிலும் நடைபெறுகின்ற ஆட்சி தேசிய முன்னணி ஆட்சிகளாக இன்றைக்கு இருப்பதுதான் மிக முக்கியமான காரணமாகும்.

## சரித்திரப் பிரகடனம் மலர்வதற்குக் காரணம் நமது தமிழகமே !

அதைப்போலத்தான் இன்றைக்கு மண்டல் கமிஷன் பரிந்துரைகளை வி.பி சிங் அவர்கள் ஏற்று, அதை ஏழாம் தேதியன்று நாடாளுமன்றத்திலும், மாநிலங்களவையிலும் ஒரு மாபெரும் சரித்திரப் பிரசித்தி பெற்ற பிரகடனமாக வெளியிட்டிருக்கிறார் என்றால் அந்த முடிவு அங்கே ஒளிவிடுவதற்கு-மலர்வதற்கு ஆதி காரணமாக இருந்ததும் இந்தியாவின் தென்கோடி முனையிலே உள்ள நம்முடைய தமிழகம்தான்.

மண்டல் குழு பரிந்துரைகளைத் தயாரித்த மண்டல் அவர்கள் குறிப்பிடுகிறார்.

Tamilnadu is the pioneer state in Communal Representation it has given representation for Backward classes

வகுப்புவாரி இடஒதுக்கீட்டிற்கு தமிழ்நாடுதான் முன்னோடியாக இருக்கிறது என்று மண்டல் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

இன்றைக்கு எனக்கு முன் பேசிய பேராசிரியரும், மற்றவர்களும் எடுத்துக்காட்டியதைப்போல் நாம் மண்டல் கமிஷன் பரிந்துரைகளுக்கும் முன்னோடியாக இருந்து இன்றைக்கு டெல்லிப் பட்டணத்திலே ஆட்சி புரிகின்ற தேசிய முன்னணியின் தலைவர் மரியாதைக்கும், மதிப்பிற்கும், அன்பிற்கும், நம்முடைய பாசத்திற்கும் உரிய வி.பி சிங் அவர்களால் ஏற்றுககொள்ளப்பட்டு மத்திய அமைச்சரவை ஏற்றுக்கொண்டு, பாராளுமன்றத்திலே - மாநிலங்களவையிலே அறிவிக்கப்பட்டுள்ளது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களால் வலுப்படுத்தப்பட்ட வகுப்புவாரி இட ஒதுக்கீட்டுக் கொள்கை. நான் 'வலுப்படுத்தப்பட்ட' என்று சொல்வதற்குக் காரணம், நீதிக்கட்சி காலத்திலேயே 1916,17,18 ஆம் ஆண்டுகளிலேயே இது முகிழ்த்து அதற்குப்பிறகு முத்தையா காலகட்டத்தில் அவர் அமைச்சராக

பொறுப்பேற்றிருந்தபோது அறிவிக்கப்பட்டு ஒரு நீண்டகால வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது இந்த வகுப்புவாரி இட ஒதுக்கீடு என்பதாகும்

## உருவாகாத சமுதாயத்திற்காக உருவாக்கப்பட்ட கொள்கை !

எனவேதான் தமிழகத்தில் - தென்னகத்திலே உருவான அந்தக் கொள்கை-நீதிக்கட்சி காலத்திலே உருவான அந்தக் கொள்கை, அது உருவானால்தான் உருவாகாமல்போன சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பதற்காக உருவாக்கப்பட்ட கொள்கை அது உருவாகாமல் இருந்திருந்தால் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதிதிராவிடர்கள், பழங்குடிமக்கள்-இவர்களெல்லாம் மேலும் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு இந்தச் சமுதாயம் நாசமாய்ப் போனது என்ற முடிவுரை என்றைக்கோ எழுதப்பட்டிருக்கும்.

## இடஒதுக்கீட்டுக்கு வந்த ஆபத்தைக் களைந்தது பெரியாரும்-அண்ணாவும்தான் !

அதற்கு இடம் தராமல் இந்தப் பெரிய காரியத்தைத் தங்கள் மீது இழுத்துப் போட்டுக்கொண்டு நீதிக்கட்சியின் தலைவர்கள் அன்றைக்கு வாதாடினார்கள், போராடினார்கள். அவர்களால் உருவாக்கப்பட்ட அந்தக் கொள்கைக்கு ஆபத்து வராமல் பாது காத்த பெருமை தந்தை பெரியார் அவர்களுக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் உரியதாகும்.

அண்ணா அவர்களுடைய காலத்திற்குப்பிறகு, பெரியார் அவர்களுடைய காலத்திற்குப்பிறகு இந்தச் சமூக அடிப்படை-கல்வி அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு என்று இருந்த நிலைகூட இடைக்காலத்திலே வந்த அரசால் மாற்றப்படக் கூடிய ஒரு சூழ்நிலை வந்து பொருளாதார அடிப்படைக்கு அந்தத் தத்துவம் கூறப்பட்டபோது அதை வேகமாக எதிர்த்தது தி.மு கழகமும், திராவிடர் கழகமும் என்பதை வரலாறு மறந்துவிட முடியாது.

## நமது குருதி ஓட்டத்தோடு ஊறிப்போன கொள்கை!

அந்த எதிர்ப்பின் காரணமாகத்தான் இடையில் வந்த ஆபத்து களையப்பட்டது. அப்படிக் களையப்பட்ட ஆபத்திற்குப் பிறகு தி.மு.கழக ஆட்சி 89-ல் மீண்டும் உங்களால் அமர்த்தப்பட்ட

நிலையில் பிற்படுத்தப்பட்ட மக்களில், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சில குறைபாடுகள் இருக்கின்றன. பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கப்பட்டவைகள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்களுக்குக் கிடைக்காமல் அவர்கள் இன்றைக்கு அவதிப்படுகிறார்கள் எனவே அந்த விகிதாச்சாரம் 50 என்பதில் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட விழுக்காடு ஒதுக்கப்படவேண்டும் என்ற குரலை மதித்து, நம்முடைய குருதி ஓட்டத்தோடு ஊறிப் போன கொள்கை அது என்ற காரணத்தால் அந்தக் குரலை அலட்சியப்படுத்தாமல் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் பெரும்பாலும் வன்னிய சமுதாயத்தினர், சீர்மரபினர் இவர்களை உள்ளடக்கிய அந்தச் சமுதாயத்திற்கு இருபது சதவிகிதம் என்று ஒதுக்கியதன் காரணமாக இரண்டாண்டுகளுக்கு முன்பு மருத்துவக் கல்லூரியில் 23 இடத்தைப் பெற்ற வன்னிய மாணவர்கள் கடந்த ஆண்டு 76 இடத்தைப் பெற்றவர்கள். இந்த ஆண்டும் 76 இடத்திற்கும் மேல் பெற்றிருக்கின்றார்கள்.

## கழக ஆட்சி அகலவேண்டுமென அரைவேக்காடுகள் சில கூச்சல் போடுவது ஏன்?

எனவே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு என்பதிலும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் என்ற பிரிவை உதாசீனப்படுத்தாமல் அவர்களையும் கைதூக்கிவிடவேண்டும் என்பதற்காக இந்த இருபது சதவிகிதத்தை நாம் அறிமுகப்படுத்தி அதில் பெரும் வெற்றி கண்டது மாத்திரம் அல்ல, இந்த ஆண்டு எந்த வகுப்பிலே பிறந்தவர்களாக இருந்தாலும் நாம் இதுவரையில் சமூக அடிப்படையில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு, தொழில் கல்வி இவைகளிலே இடஒதுக்கீடு செய்கிறோம். பட்டதாரிகளே இல்லாத குடும்பமாக இருந்தால் அந்தக் குடும்பம் அக்ரகாரத்துக் குடும்பமாக இருந்தாலும், ஆதிதிராவிடர் வீட்டுக் குடும்பமாக இருந்தாலும், அது வன்னியர் வீட்டுக் டுகும்பமாக இருந்தாலும், தேவர், யாதவர் வீட்டுக் குடும்பமாக இருந்தாலும், எந்தப் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட அல்லது தாழ்த்தப்பட்ட அல்லது மேல்மட்ட ஆக எந்தக் குடும்பமாக இருந்தாலும் அந்தக் குடும்பத்தில் அண்ணனோ, தம்பியோ, அக்காவோ, தங்கையோ அல்லது பெற்றோர்களோ பட்டம் பெறாமல் இருப்பார்களேயானால் அந்தக் குடும்பத்திலிருந்து முதன்முதலாக வரும் மாணவன் மருத்துவக் கல்லூரியிலே சேர வேண்டுமேயானால், பொறியியற் கல்லூரியிலே சேர வேண்டுமேயானால், விவசாயக் கல்லூரியிலே சேர வேண்டுமேயானால், சட்டக் கல்லூரியிலே சேர வேண்டுமேயானால், அந்தக் குடும்பத்தின் முதல் பட்டதாரியாக

வருபவருக்கு 5 மார்க் அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்கின்ற ஒரு ஆணையைப் பிறப்பித்தது இந்தியாவிலே தமிழ் நாட்டிலே உள்ள தி.மு.க்ழக ஆட்சிதான். இதற்காகத்தான் நாம் வெளியே போகவேண்டும் என்று சிலபேர் நமைச்சல் எடுத்துத் திரிகிறார்கள்

அதுமாத்திரமல்ல, அந்தக் குடும்பமும் பொருளாதாரத்தில் வீழ்ச்சியுற்ற குடும்பமாக இருந்தால், ஆண்டுக்கு 15 ஆயிரம் ரூபாய் வருமானம் உள்ள ஆதிதிராவிடர்க் குடும்பமாக இருந்தால் அந்தக் குடும்பத்தில் ஆண்டு வருமானம் 12 ஆயிரம் உள்ள ஆதிதிராவிடர்க் குடும்பமாக இருந்தால், அந்தக் குடும்பத்தில் யாருமே பட்டதாரியாக இல்லாமல் வருகின்ற முதல் பட்டதாரி மாணவன் தொழிற் கல்வியைப் படித்து முடிக்கிற வரையில் அது எம்.பி.பி.எஸ்.சாக இருந்தாலும், எஞ்சினியரிங் கல்லூரியாக இருந்தாலும், சட்டக் கல்லூரியாக இருந்தாலும், விவசாயக் கல்லூரியாக இருந்தாலும் அந்தப் படிப்பு முடிகிற வரையில் இலவசக் கல்வி என்று அறிவித்திருப்பதும் இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான். அதற்காகத்தான் நாம் ஆட்சியைவிட்டு அகலவேண்டும் என்று சில அரசியல் அரைவேக்காடுகள் பேசுகின்ற காட்சியை நீங்கள் காணுகின்றீர்கள்.

இவைகளின் தொடர்பாக இவற்றின் பாதிப்பாகத்தான் அகில இந்தியாவிலே சில மாநிலங்களில் இந்த அளவிற்கு வேகமாக புரட்சிகரமாக இல்லாவிட்டாலும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக ஓரளவு சலுகைகள், உரிமைகள் கடந்த காலத்தில் படிப்படியாக, கொஞ்சம் கொஞ்சமாக வேகமாக இல்லாவிட்டாலும் மெல்ல மெல்ல இன்றைக்கு வழங்கப்பட்டுள்ள சூழ்நிலையில் இந்தியா முழுமையும் பிற்படுத்தப்பட்ட மக்கள் மத்திய அரசு வேலை வாய்ப்புக்களில் - மத்திய அரசு சார்புடைய நிறுவனங்களில், வேலை வாய்ப்புக்களில் அவர்களுக்கு சமூகநீதி கிடைக்க வேண்டும் என்று நாம் போராடி வருகிறோம்.

## 73-ஆம் ஆண்டு மாநாட்டில் நான் எழுப்பிய குரல்!

*1973*-ஆம் ஆண்டு அலகாபாத்தில் நடைபெற்ற பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டிற்கு நான் அழைக்கப்பட்டிருந்தேன். அங்கே நான் தமிழிலே பேசினேன். இந்தியிலே மொழிபெயர்க்க சந்திரகாந்த் என்ற சென்னையைச் சேர்ந்த ஒரு பேராசிரியர் அங்கே வந்திருந்தார். அவர் என்னுடைய பேச்சை மொழி பெயர்த்தார். பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டில் அன்றைக்கு சரண்சிங் போன்ற தலைவர்கள் எல்லாம் கலந்துகொண்டார்கள்.

சந்திரஜித் யாதவ் போன்ற தலைவர்களெல்லாம் கலந்து கொண்டார்கள்.

அந்த மாநாட்டில் நான் பேசும்போது சொன்னேன் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கென்று இத்தனை சதவிகிதம் என்று இடஒதுக்கீடு இருக்கிறது. கல்வி, வேலை வாய்ப்புத் துறையில் இருக்கிறது. ஆனால் வேலை வாய்ப்புத் துறையில் தமிழ்நாட்டு மக்களுக்கு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இருக்கின்ற அந்த உரிமையை அந்த இடஒதுக்கீட்டை மத்திய அரசு சார்புடைய வேலை வாய்ப்புக்களில் இன்றைக்குப் பெற முடியவில்லை. எனவே அதற்கு மத்திய அரசு வழிவகை காண வேண்டும் என்கின்ற வேண்டுகோளை அந்த மாநாட்டிலே நான் விடுத்தேன். அதற்கு நான்தான் மூலகர்த்தா என்று பெருமை யடித்துக்கொள்ள நான் இதைச் சொல்லவில்லை. நானோ, பேராசிரியரோ எதைப் பேசினாலும் அதற்கு அடித்தளமாக அமைந்திருப்பது பெரியாரின் கொள்கை - பேரறிஞர் அண்ணாவின் லட்சியம் என்பதை மறந்துவிட்டுப் பேசுகின்ற ஆணவக்காரர்கள் அல்ல நாங்கள். எங்களுக்கு இருக்கிற ஆணவமே பெரியாரின் கொள்கையை அடிப்படையாக வைத்துப் பேசுகிறோம், அண்ணா வின் லட்சியத்தின் அடிப்படையில் பேசுகிறோம் என்கின்ற ஆணவமே தவிர நாங்களேதான் இதைப் பேசுகிறோம் என்கின்ற ஆணவம் கிடையாது.

அன்றைக்கு இந்தக் கருத்தை எடுத்துச் சொன்னேன். தீர்மானங்கள் கழகச் செயற்குழு, பொதுக்குழுவில் நிறைவேற்றப் பட்டன. கழக அரசின் சார்பாக வலியுறுத்தப்பட்டது அதற்குப் பிறகு 1977-ஆம் ஆண்டு அன்றைக்கு ஜனதா ஆட்சி இந்தியத் துணைக்கண்டத்தில் நிறுவப்பட்டபோது மண்டல் கமிஷன் ஒன்றை நியமித்து அறிக்கை வெளியிடப்பட்டது 20-12-78-ல் மண்டல் கமிஷன் நியமிக்கப்படும் என்கின்ற அறிவிப்பு வெளிவந்தது. அந்த அறிக்கை தயாரித்து முடிக்கப்பெற்று 31-12-80 அன்று இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் தரப்பட்டது.

## மண்டல் கமிஷன் பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்பட நாம் நடத்திய போராட்டங்கள்!

அதற்கிடையில் ஜனதா ஆட்சி வீழ்ந்துவிட்ட காரணத்தால் 80-ல் ஆட்சிக்கு வந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடத்தில் 31-12-80-ல் மண்டல் கமிஷன்பரிந்துரை அறிக்கை தரப்பட்டது.

அப்படி தரப்பட்ட அறிக்கை இரண்டாண்டு காலம் கழித்துதான் 30-4 82-ல் நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டது. அறிக்கையை நாடாளுமன்றத்தில் வைக்கவே இரண்டாண்டு ஆனது. அவ்வளவு தயக்கம் இந்த அறிக்கை தேவைதானா என்கின்ற மயக்கம். எனவே அறிக்கை வைக்கப்படவில்லை. அறிக்கையை பாராளுமன்றத்தில் வைப்பதற்கே நாம் இங்கு பல மாநாடுகள் கூட்ட வேண்டியிருந்தது. டெல்லிக்குச் சென்றேபல போராட்டங்களை நாம் நடத்த வேண்டிருந்தது. நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களெல்லாம் டெல்லி சிறைசசாலைக்குச் செல்ல வேண்டிய நிலை இருந்தது. அவ்வளவு பெரிய போராட்டத்திற்குப்பிறகு 82-ல் நாடாளுமன்றத்தில் மண்டல் குழு பரிந்துரை அறிக்கை வைக்கப்பட்டது.

அதன் பின்னர் இந்த எட்டாண்டு காலம் எத்தனையோ முறை நாம் குரல் கொடுத்தோம். நாடாளுமன்றத்தில் பேசினோம். நாடாளுமன்றத்தில் இதற்காக நம்முடைய தீர்மானங்களையே கொண்டு வந்தோம். மசோதாக்களையே முன்வைத்தோம். சட்டப்பேரவையில் அதைப்பற்றிப் பேசினோம். தி.மு.கழக மாநாடுகளில் தீர்மானங்களை வடித்தெடுத்து அவற்றினை அனுப்பிவைத்தோம். இந்திரா காந்தியை சந்திக்கும்போது கேட்டோம். ராஜீவ் காந்தியைச் சந்திக்கும்போது கேட்டோம். அதற்குபிறகு 89-ல் தி மு கழக ஆட்சி வந்தது. அந்த ஆட்சி வருவதற்குமுன் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மத்திய அரசில் வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு பெறுகின்ற அந்தப் பரிந்துரைகளை நிறைவேற்ற மத்திய அரசை வலியுறுத்திப் போராடுவோம் என்று தேர்தல் அறிக்கையில் சொன்னோம். வென்றோம். அதற்குப்பிறகு தேசிய முன்னணி தேர்தலில் போட்டியிட முன்வந்தது. தேசிய முன்னணி தேர்தல் பிரகடனம் தயாரித்தபோது அதில் மண்டல் குழு அறிக்கையை நாங்கள் அமல்படுத்துவோம் என்கின்ற வாசகம் இணைக்கப்பட்டது. தேசிய முன்னணி அரசு அமைந்தது. அது அமைவதற்கு முன்பு 89-ஆம் ஆண்டு ராஜீவ்காந்தி பிரதமராக இருந்தபோது தமிழ்நாடு சட்டமன்றத்தில் தி.மு.கழக அரசின் சார்பில் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்றுங்கள் என்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ராஜீவ் காந்திக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அது ராஜீவ் காந்தியால் குப்பைக் கூடையில் தூக்கி போடப்பட்டது.

ஆனால் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தேசிய முன்னணி ஆட்சிக்கு நினைவூட்டி மண்டல் கமிஷன் அறிக்கையை அமல்படுத்துங்கள் என்று கேட்டுக் கொண்டு உரையாற்றினேன்.

அதற்குப் பிறகு டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழு - எல்லா முதலமைச்சர்களும் கலந்து கொள்ளும் கூட்டம். அந்தக் கூட்டத்தில் நான் ஒருவன்தான் - என்னுடைய பேச்சில் தான் 'மண்டல் குழு பரிந்துரையை நிறைவேற்ற இனியும் தாமதம் செய்யாதீர்கள்' என்று குறிப்பிட்டேன்.

அதற்குப் பிறகு மண்டல் குழுவிற்கு பரிந்துரைகளை நிறை வேற்றுவதற்கு ஒரு கமிட்டி போடப்பட்டு அதற்கு துணைப் பிரதமராக இருந்த தேவிலால் தலைவராக நியமிக்கப்பட்டார். அதன் பிறகு நானும் தம்பி மாறனும் தேவிலால் அவர்களைச் சந்தித்து அந்தக் கமிட்டியைப் பற்றி விசாரித்தோம். அவர் சொன்னார், ''மண்டல் குழு பரிந்துரைகளை நிறைவேற்ற நாங்கள் தயங்கவில்லை. ஆனால் இதை எந்தெந்த சாதிப் பிரிவுகளை சேர்ப்பது, என்பதில் தயக்கம் இருக்கிறது. எனவேதான் நாங்கள் இதை உடனடியாக அறிவிக்க முடியாமல் தாமதிக்கிறோம்'' என்று சொன்னார். நான் அவரிடத்திலே "இதற்கு நீங்கள் கஷ்டப் படத் தேவையில்லை. ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கின்ற சாதிப் பட்டியல் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் யார் யார் என்ற பட்டியல் அந்தந்த மாநிலத்திலே இருக்கிறது. எனவே அந்தந்த மாநிலப்பட்டியலை வாங்கி அதற்கு ஏற்றவாறு அந்தப் பரிந்துரைகளை நிறைவேற்ற முன் வாருங்கள்'' என்று சொன்னேன். தேவிலால் "இது நல்ல யோசனை'' என்று சொன்னார்,

ஆனால் அதற்குப் பிறகும் தாமதம் ஏற்பட்டது. மீண்டும் பிரதமரை சந்தித்து உடனடியாக இதை நிறைவேற்ற தி.மு.கழகம் சார்பில் கேட்டுக் கொண்டோம். நம்முடைய செயற்குழு, பொதுக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினோம். இதன் விளை வாக இன்றைய தினம் மண்டல் கமிஷன் பரிந்துரைகள் நடை முறைக்கு வரக்கூடிய பரிசு இந்த விடுதலை நாளையொட்டி நமக் கெல்லாம் கிடைத்திருக்கிறது.

## மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நாம் வலியுறுத்த காரணமென்ன?

மண்டல் கமிஷனை நாம் வலியுறுத்த வேண்டிய அவசியம் என்ன என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆலடி அருணா இங்கே பேசும்போது சில புள்ளி விவரங்களை மேல் எழுந்த வாரி யாக கோடிட்டுக் காட்டினார்.

நான் உங்களுக்குச் சிலவிவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். இதற்குப் பிறகாவது மண்டல் குழு பரிந்துரைகளை நிறைவேற்றுவது நியாயம்தானா அல்லவா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நடுநிலையாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

எனக்குள்ள சங்கடமெல்லாம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக செய்யக்கூடிய காரியங்களை முன்னேறிய மக்கள் எதிர்த்தால் பரவாயில்லை. பிற்படுத்தப்பட்ட மக்களே புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறார்களே என்பதுதான். அதுதான் எனக்குள்ள கவலை. சிலபேர் கேட்பார்கள். பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, ஆதிதிராவிட மக்களுக்கு இவ்வளவு காரியம் செய்கிறாயே அவர்கள் அத்தனை பேரும் உன்னை ஆதரிக்கிறார்களா, இதைப் புரிந்து கொள்கிறார்களா என்று கேட்பார்கள். நான் சொல்கிறேன் அவர்களுக்கு - இதைப் புரிந்து கொள்ளாத காரணத்தால்தானே அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள். (கைதட்டல்) மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள். தாழ்ந்து கிடக்கிறார்கள். எனவே அவர்களைக் குற்றம் சொல்லி பயன் இல்லை. குற்றம் நம்மீதுதான். நாம் இன்னும் அவர்களுக்குச் சொல்லவேண்டிய அளவிற்குச் சொல்லவில்லை, அவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய அளவிற்கு தெளிவு படுத்தவில்லை. எனவே நாம் ஆற்ற வேண்டிய பணி இன்னும் இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டுமேயல்லாமல் அவர்களைச் சொல்லிப் பயன் இல்லை. எனவேதான் இந்த விவரத்தை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

மத்திய அரசில் மண்டல் கமிஷன் நியமிக்கப்பட்ட நேரத்தில் மண்டல் அவர்களும், அந்தக் குழுவும் எடுத்த கணக்கை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

## பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கிடைத்த பிரதிநிதித்துவம்: புள்ளிவிவரத்தைப் பாருங்கள்!

மத்திய அரசில் பாதுகாப்புத் துறை. அதிலே கிளாஸ் ஒன்று என்ற பிரிவில் உள்ள அதிகாரிகள் எத்தனை பேர் அந்தப் பதவியில் உள்ளனர் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். மொத்த அதிகாரிகள் அலுவலாளர்கள் 1379 பேர் பாதுகாப்புத் துறை அதிகாரிகள், நான் வீரர்களைச் சொல்லவில்லை. சிப்பாய்களைச் சொல்லவில்லை அவர்களெல்லாம் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்டவர்களாக இருப்பார்கள். அங்குள்ள அலுவலாளர்கள் 1379 பேரில் உயர் ஜாதிக்காரர்கள் 1322 பேர். தாழ்த்தப்பட்டவர்கள் 48 பேர். பிற்படுத்தப்பட்டவர்கள் 9 பேர்.

பாதுகாப்புத்துறை - அதிலே அலுவலர் மொத்தம் 1379. அதில் உயர் ஜாதிக்காரர்கள் 1322 பேர், தாழ்த்தப்பட்டவர்கள் 48 பேர், பிற்படுத்தப்பட்டவர் 9 பேர். ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். ஏற்கனவே தாழ்த்தப்பட்டவர்களுக்கு இருபத்தி இரண்டரை சதவிகிதம் இருக்கிறது. அதன்படி அவர்களுக்கு கிடைக்க வேண்டிய எண்ணிக்கை 310. அது கூட கிடைக்காமல் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள்.

இப்போது வி.பி.சிங் அறிவித்திருக்கிற 27 சதவிகிதப்படி பிற்படுத்தப்பட்டவர்களுக்குக் கிடைக்க வேண்டிய இடம் 372 கிடைத்திருக்கிற இடம் 9 தான். இனிமேல் கிடைக்கப் போகிற இடம் 372. வயிறு எரியுமா? எரியாதா? இது வரையில் வாழ்ந்து கொண்டிருந்தவர்களுக்கு (பலத்த கைதட்டல், ஆரவாரம்).

அதே பாதுகாப்புத் துறையில் கிளாஸ் 2 அதிகாரிகள் பதவி மொத்த அலுவலர் 7752 பேர். அதில் உயர் ஜாதிக்காரர்கள் 6762 பேர். தாழ்த்தப்பட்டவர்கள் அவர்கள் விகிதாச்சாரப்படி இருக்க வேண்டியவர்களே 1774 பேர் இருக்க வேண்டும். ஆனால் இருக்கிற எண்ணிக்கை 803. பிற்படுத்தப்பட்டவர்கள் இன்றைக்கு வி பி சிங் அறிவித்திருக்கிற விகிதாச்சாரப்படி இடம் பெற வேண்டியவர்கள் 2093. ஆனால் இடம் பெற்றிருப்பவர்கள் 187.

கிளாஸ் III, கிளாஸ் IV பாதுகாப்புத் துறையில் உள்ள அலுவலர்கள் மொத்த அலுவலர் 2177. அதிலே உயர் ஜாதிக்காரர்கள் 1392. பிற்படுத்தப்பட்டோர் 131. தாழ்த்தப்பட்டவர்கள் 604 அவர்களுக்குக் கிடைக்கவேண்டியது 470 என்றாலும் 604 கிடைத்திருக்கிறது. காரணம் அது மூன்றாம் கிளாஸ், நான்காம் கிளாஸ், முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு அல்ல, அதிலே கூட பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 131 இடம்தான் கிடைத்திருக்கிறது. இன்றைக்கு இருக்கிற இடஒதுக்கீடு அன்றைக்கு இருந்திருந்தால் 574 இடம் கிடைத்திருக்க வேண்டும்.

பாதுகாப்புத் துறையில் பணியாற்றும் அனைத்து அலுவலர்களும் சேர்ந்து மொத்தம் 11258 பேர் அதிலே உயர் ஜாதிக்காரர்கள் 10476 பேர். தாழ்த்தப்பட்டோர் 1455 பேர் பிற்படுத்தப்பட்டோர் 327 பேர். மண்டல் கமிஷன் தேவையா இல்லையா? (குழுமியிருந்த மக்கள் தேவை தேவை என குரல்)

மத்திய அரசின் நிதித் துறையில் கிளாஸ்-1 அதிகாரிகள் மொத்தம் 1008 பேர். அதில் உயர் ஜாதிக்காரர்கள் 941 பேர். தாழ்த்தப்பட்டோர் 66 பேர். அவர்களுக்கு ஏற்கனவே இருக்கிற

விகிதாச்சாரப்படி இருபத்தி இரண்டரை சதவிகிதப்படி 227 இருக்க வேண்டும். கொடுக்கப்படவில்லை. 66 தான் அவர்களுக்கு பிற் படுத்தப்பட்டோர் எவ்வளவு பேர் தெரியுமா? ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு! நான் வேடிக்கைக்காக இதைச் சொல்லவில்லை. நான் கேட்கிறேன். சமுதாயத்தின் கண்ணைப் பெயர்க்கின்ற முயற்சியல்லவா இதுவரையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதை மாற்றி அமைக்க மண்டல் கமிஷன் தேவையா? இல்லையா? (தேவை! தேவை!! என குரல்)

அதே நிதித்துறையில் கிளாஸ் - II அதிகாரிகள் மொத்தம் 2824 பேர். அதில் உயர் வகுப்பினர் 2507 பேர், தாழ்த்தப் பட்டோர் கொஞ்சம் அதிகம் 306 பேர். பிற்படுத்தப்பட்டோர் 11 பேர். இன்றைக்கு வி.பி.சிங் அறிவித்திருக்கிற பரிந்துரை நிறை வேறுமேயானால் 767 பிற்படுத்தப்பட்டோர்களுக்கு இடம் கிடைக்கும். பிற்படுத்தப்பட்ட மக்களே உங்களை கேட்கிறேன். மண்டல் கமிஷன் தேவையா இல்லையா ?

நிதித்துறையில் கிளாஸ்-II கிளாஸ்-IV மொத்தம் 821 பேர் உயர் ஜாதி 606, தாழ்த்தப்பட்டோர் 202 பேர். பிற்படுத்தப்பட்டோர் 13 பேர் பிற்படுத்தப்பட்ட சமுதாயமே உன்னைக் கேட்கிறேன். மண்டல் கமிஷன் தேவையா இல்லையா? (தேவை, தேவை என மக்கள் குரல்) இவ்வளவு ஈனஸ்வரத்திலே சொன்னால் இன்டியன் எக்ஸ்பிரஸ் காதிலே விழாது. (தேவை! தேவை!! என ஓங்கி ஒலிக்கிறது கூட்டத்தின் குரல்).

செய்தித் துறையில் மொத்தப் பணியாளர்கள் 16505 பேர். உயர் ஜாதிக்காரர்கள் 11498 பேர். தாழ்த்தப்பட்டோர் 3660 பேர். விகிதாச்சாரப்படி 3714 பேர் இருக்க வேண்டும். இருப்பது 3660. பிற்படுத்தப்பட்டவர்கள் 1347 பேர்தான்.

திட்டத்துறையில் மத்திய அரசின் மொத்தப்பணியாளர் 6917 பேர். உயர் ஜகதிக்காரர்கள் 4582 பேர். தாழ்த்தப்பட்டோர் 1556 பேர் இருக்க வேண்டும். இருப்பது 977 பேர். பிற்படுத்தப் பட்டோர் 1868 பேர் இருக்க வேண்டும். ஆனால் அன்றைய விழுக்காட்டுப்படி இருப்பது 358 பேர்.

சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்தின் துறையில் மொத்தப்பணியாளர் 9185 பேர். உயர் ஜாதிக்காரர்கள் 6463 பேர் பிற்படுத்தப்பட்டோர் 541 பேர்.

குடியரசுத் தலைவர் அலுவலகத்தில் மொத்தப்பணியாளர்கள் 307 பேர். அதிலே உயர் ஜாதிக்காரர்கள் 260 பேர். தாழ்த்தப்

பட்டோர் 47 பேர், பிற்படுத்தப்பட்டோர் பூஜ்யம், பூஜ்யங்களே பூஜியமாக ஆக்கப்பட்டவர்களே! தலைச்சுழி ஒழுங்காக இல்லாத காரணத்தால் குடியரசுத் தலைவர் அலுவலகத்தில் சுழியாக ஆகிவிட்டவர்களே! ஏமாற்றப்பட்ட சமுதாயமே! உன்னைக் கேட்கிறேன். மண்டல் கமிஷன் தேவையா இல்லையா? (தேவை ! தேவை ! என மக்கள் குரல்).

## பொருளாதார அடிப்படை என்ற கூச்சலுக்கு நேருவின் பதில்!

மண்டல் கமிஷன் பரிந்துரைகளை எதிர்த்து பொருளாதாரத் துறையில் - பொருளாதார அடிப்படையில்தான் இந்த இட ஒதுக்கீடுகள் தேவை என்று சிலபேர் வாதிடுகிறார்கள். அவர்களுக்கு நான் அல்ல அரசியல் சட்டத்திலே முதல் திருத்தத்தை கொண்டுவந்தபோது பண்டித நேரு பதிலளித்திருக்கிறார் என்ன பதில் தெரியுமா ? ''பொருளாதார நிலை என்பது நிரந்தரமானது அல்ல. ஒருவன் இந்த ஆண்டு பணக்காரனாக இருப்பான். அடுத்த ஆண்டு வருமானம் இல்லாமல் போய்விடும். அதற்கு அடுத்த ஆண்டு வருமானம் வரக்கூடும். எனவே பொருளாதார அடிப்படை என்று அமையக்கூடாது'' என்று நான் அல்ல, பண்டித நேரு அவர்கள், இங்கே தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் போராடிய நேரத்தில் உயர்நீதி மன்றத்திலே - உச்சநீதி மன்றத்திலே வகுப்புவாரி பிரதிநிதித்துவ கொள்கை அடிப்பட்டுப்போன நேரத்தில், வகுப்புவாரி இட ஒதுக்கீடு வேண்டும், என்பதற்காக வரிந்து கட்டிக்கொண்டு பெரியாரும், அண்ணாவும் களத்தில் நின்ற அந்தக் கால கட்டத்தில் பண்டித நேரு தமிழகத்திலே பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்த அரசியல் சட்ட திருத்தம் தேவை என்று அரசியல் சட்ட திருத்தத்திற்கு முதல் சட்டதிருத்தம் கொண்டு வந்தாரே அப்போது பொருளாதார அடிப்படையில் இதைக் கவனியுங்கள் என்று பலரும் கூச்சல் போட்டபோது அளித்த பதில்தான் நேருவின் இந்த பதில்.

பொருளாதார அடிப்படை என்பது அடிக்கடிமாறும். இந்த ஆண்டு ஏழையாக இருப்பவன் அடுத்த ஆண்டு பணக்காரனாக இருக்கலாம். பணக்காரனாக இருப்பவன் ஏழையாகலாம். எனவே அடிக்கடி மாறக்கூடிய அடிப்படையாக வைக்க இயலாது என்று நாங்கள் அல்ல பண்டித நேரு அவர்கள் 1952-53-ஆம் ஆண்டில் எடுத்துச் சொன்ன கருத்தாகும்.

இன்றைக்கு இந்த மண்டல் குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்துவதையே சாக்காக வைத்துக் கொண்டு தேசிய

முன்னணி அரசுக்கு இடையூறு ஏற்படுத்தலாம். இங்கே தமிழ் நாட்டிலே நடைபெறும் தி.மு கழக ஆட்சிக்கு இடையூறு ஏற்படுத்தலாம். ஆகவே கிளர்ச்சி நடத்த வாருங்கள் என்று எழுத வேண்டியதையெல்லாம் எழுதிவிட்டு இறுதியாக வன்முறைக்கு இடம் தராதீர்கள் என்று வன்முறையையும் ஞாபகப்படுத்துகின்ற வகையில் தலையங்கம் தீட்டியிருப்பவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பேராசிரியர் இங்கே குறிப்பிட்டதைப்போல எங்களுக்கு பதவி பெரிதல்ல கொள்கை பெரிது. ஆட்சி பெரிதல்ல அய்யாவும், அண்ணாவும் வகுத்துத்தந்த சமூக நீதியைக் காப்பாற்றுவதுதான் பெரிது (பலத்த கைதட்டல்) இந்த சமூக நீதியை காப்பாற்றுகின்ற போர் வீரர்களாக நாங்கள் இருப்போமேயல்லாமல், சமூக நீதியை வெட்டிப் புதைத்துவிட்டு தலையிலே கிரீடத்தை வைத்துக் கொண்டு கோணங்கிகளாக கோட்டையிலே கொலு வீற்றிருக்க நாங்கள் என்றைக்கும் தயாராக இல்லை. (கை தட்டல்) இதில் நாங்கள் பிடிவாதமாக இருப்பதால் ஆட்சி பறிபோய் விடலாம். போனால் என்ன?

## கட்டபொம்மனாகத்தான் நாங்கள் வாழ்வோம் !

கட்டபொம்மன் கூட செத்தான் தூக்கிலே தொங்கவிடப்பட்டான். இன்றைக்கு கட்டபொம்மன் பெயர்தான் ஞாபகத்தில் இருக்கிறது. கொள்கைக்காகச் செத்தான் கட்டபொம்மன். இன்றைக்கும் வரலாறு அவனை மறக்கவில்லை. அவன் எதிர்த்த வெள்ளைக்காரனின் பெயர் பலபேருக்குத் தெரியாது. ஆனால் கட்டபொம்மனின் பெயர் இங்கே இருக்கும் அத்தனை பேருக்கும் தெரியும். அவனைத் தூக்கு மாட்டியவன் யார்? என்று கேட்டால் சில பேருக்குத்தான் தெரியும். எல்லோருக்கும் தெரியாது.

அதைப்போல நாங்கள் கட்டபொம்மனாக வாழ விரும்புகிறோமேயல்லாமல் எட்டப்பனாக வாழவிரும்பவில்லை என்பதைத் தெரிவித்து, இந்த விடுதலைநாளில் நமக்கு சமூக விடுதலையும் கிடைத்திருக்கிறது என்பதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள்.

தமிழ் நூல் காப்பகம்
52263
..... நகர், விருத்தாசலம் - 606 001.

THAMIZH NOOL KAPPAGAM
52263
Thamizh Nagar, Viruthachalam - 606 001